1979 ஏப்ரல் 27]

புதிய தாலூகாக்கள்

*வினா எண். 845—திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தென் ஆற்காடு மாவட்டம், சங்கராபுரம், கல்வராயன் மலைப் பகுதிகளை ஒன்றாகச் சேர்த்து தனித் தாலூகாவாக்க ஏதேனும் செயற்குறிப்பு உண்டா?

(ஆ) ஆம் என்றால் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) தற்போது இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. துரை முத்துசாமி: பேரவைத் தலைவரவர்களே, அங்கே மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த அரசுக்குப் பரிந்துரை செய்திருப்பதாகச் சொல்கிறார்கள், தற்பொழுது இல்லை என்றால் எப்பொழுது என்று அறியலாமா? அல்லது இல்லையா ? இல்லை என்றால் இல்லை என்பதையாவது அறுதியிட்டுக் கூறுவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கிருக்கின்ற நிலைமையில் அப்படி ஒரு புதிய தாலூக்காவை ஏற்படுத்த வேண்டிய நிலைமை ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. கோவிந்தராசன்: பேரவைத் தலைவரவர்களே, ஒரு வட்டத்தை அமைக்க என்னென்ன தேவை ? ஜனத்தொகை அடிப்படையிலா அல்லது விஸ்தீரணத்தின் அடிப்படையிலா அல்லது வருமானத்தின் அடிப்படையிலா ? எந்த அடிப்படையில் வட்டம் அமைய வேண்டுமென்பதைப் பற்றி அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இதே அவையில் பல தடவை சொல்லியிருக்கிறேன். அதை உறுப்பினரவர்கள் கவனிக்கவில்லை என்று கருதுகிறேன். சொன்னதையே திருப்பிச் சொல்வது என்றால் புதிய விஷயங்களைச் சொல்வதற்கு நேரமே இருக்காது. ஒரு வட்டமாக இருந்தாலும் சரி, ஒரு கோட்டமாக இருந்தாலும் சரி, ஒரு மாவட்டமாக இருந்தாலும் சரி, கிராமமாக இருந்தாலும் சரி, ஜனத்தொகை, வருமானம், அதனுடைய அளவு, அதனுடைய

பின் தங்கிய நிலைமைகள் இவைகளையெல்லாம் ஆராய்ந்து, எதைச் செய்தால் நல்லது என்று கருதுகிறோமோ அதை முறைப்படி, மிக மோசமான நிலைமையில் இருப்பதை முதலில் எடுத்துக்கொள்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*வினா எண் 846—திரு. கெ. சொக்கலிங்கம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள பெரிய தாலுக்காவான செங்கல்பட்டு தாலுக்காவை பிரித்தமைக்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆமெனில் எந்தெந்த பிர்க்காக்கள் எந்த அடிப்படையில் பிரிக்கப்பட உள்ளன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) தற்போது இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

ரத்தனகிரி பாலமுருகன் கோயில்

* வினா எண் 847—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வடாற்காடு மாவட்டம், வேலூருக்கு அருகாமையில் உள்ள ரத்தனகிரி பாலமுருகன் கோயிலில் பிப்ரவரி மாதம் வெள்ளோட்டம் விடப்பட்ட தங்கத்தேருக்கு அரசு ஏதேனும் நிதி உதவியளித்துள்ளதா ?

(ஆ) அங்கு கட்டப்பட்டுள்ள குளத்திற்கு நிதி உதவி ஏதும் அளிக்கப்பட்டதா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு ?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவை செயலர்) : (அ) & (ஆ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS